பரி.பவுல்

# அஹமதி தமிழ் திருச்சபை

தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.

யோபு 42:2

# செய்திமலர்

இதழ்:09 மலர்:33

# ஆகஸ்ட் 2026

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



## "கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிப்பார்"

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் எப்பொழுதும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு மறவாமல் ஸ்தோத்திரம் செலுத்துவோம். கர்த்தரின் மேலான கிருபையினால் 2026 -ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் பிரவேசிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரமும் நன்றியும் செலுத்துவோம். விடுமுறைக்கு செல்கின்ற மற்றும் விடுமுறையை முடித்து வருகின்ற யாவருக்கும் கர்த்தர் போதுமானவராய் இருந்து காத்து நடத்துவாராக.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு கர்த்தர் எப்பொழுதும் போதுமானவராக இருக்கிறார் என்பதை ஒருபோதும் நாம் மறந்துவிடக் கூடாது. நம்முடைய வாழ்க்கையில் நடக்கின்ற சின்ன சின்ன நிகழ்வுகள் ஏதேனும் கசப்பை, சஞ்சலத்தை உண்டாக்குகின்ற போது கர்த்தருடைய பிள்ளைகள் என்று சொல்லுகிற நாம் சோர்ந்து விடக்கூடாது. கர்த்தர் நம்மை காக்கிறவர்; நம்மை நடத்துகிறவராய் இருப்பதாலும் எப்போதும் அவரையே பற்றிக் கொள்ள வேண்டும். இதுவே கர்த்தருடைய பிள்ளைகள் என்று சொல்லுகிறவர்களுக்கு ஏற்றதும் உகந்ததுமாம்.

வேதம் நமக்கு கூறுகிறது, **“தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்”** (யோபு. 42:2) என்று. நமக்கு விரோதமாய் என்ன நேர்ந்தாலும், யார் வந்தாலும், யார் தடையாய் நின்றாலும் கர்த்தரின் வசனம் சொல்லுகிறது போல நம் தேவன் நமக்காக சகலத்தையும் செய்ய வல்லவர் என்பதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். அத்தோடு நம் தேவன் நமக்காக செய்கின்ற போது, அது தடைபடாது: யாரும் தடை செய்யவும் முடியாது என்பதையும் நாம் உறுதியாய் விசுவாசத்தோடு மனதில் நிறுத்தி கர்த்தரை என்றும் பற்றிக் கொள்ள வேண்டும்.

அப்பொழுது கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது போல, **“முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும், காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்கு கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்”** (ஏசா. 55:13) என்ற கர்த்தருடைய வசனத்தின்படி கர்த்தரைப் பற்றிக் கொண்டு வாழ்கின்றவற்கு வரட்சியாய் காணப்படும் வாழ்க்கையானது கனிதரும் செழிப்பான வாழ்க்கையாய் மாறும். அது மிகுந்த பலன் தரும் விருட்சம் நிறைந்த வாழ்வாய் மாறும். அதனால் கர்த்தரின் நாமமும் மகிமையடையும். ஆதலால் எந்த நிலையிலும் துவண்டு போகாமல் கர்த்தரையே பற்றிக் கொள்வோம். **“கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிப்பார்”** (சங். 138:8).

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக.
நம்மேல் கிருபையுள்ள தேவனுக்கே என்றென்றும்
மகிமை உணடாவதாக. ஆமென்..

கர்த்தர் கிருபையில்
சகோ. ஆரோக்கியதாஸ். P

## தேவன் மேல் கொள்ளும் பக்திவைராக்கியம்

"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது. உம்மை நிந்திக்கிறவர் களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது."சங் 69:9. "என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால், என் பக்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது." –சங் 119:139. தாவீது கர்த்தர்மேல் கொண்ட பக்திவைராக்கியத்தை இப்படியாய் வெளிபடுத்துகிறது.

### சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ

"நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனைசெய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமலும் இருந்தது மெய்தானா ?" –தானியேல் 3:14. அவர்கள் கர்த்தர் மேல் கொண்ட பக்திவைராக்கியத்தால் அவர்கள் சொன்ன பதில் "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.–தானியேல் 3:16,17,18. சிறிதளவுக் கூட பயம் இல்லாமல், பதட்டப்படாமல் ராஜாவுக்கு அவர்கள் பதில் கொடுத்தார்கள். இவர்கள் பக்திவைராக்கியத்தினால் ராஜா கர்த்தரை ஏற்றுக் கொண்டார்."ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்." – தானியேல் 3:29.

"அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன் பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர்."1இரா 18:22. இரண்டு காளைகளை கொண்டுவரட்டும் ஒன்றை அவர்கள் வைக்கட்டும், மற்றொன்று நான் வைக்கிரேன். "நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள் நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன், அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள். – 1இரா 18:24. "மத்தியானவேளையிலே எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள்; அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான் அல்லது அலுவலாயிருப்பான்; அல்லது பிரயாணம்போயிருப்பான்; அல்லது தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும் என்றான்." – 1இரா 18:27. "அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்.
கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான். அப்பொழுது "கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலில் இருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது." – 1இரா 18:36,37,38. பெரிய ஜனக்கூட்டத்திற்க்கு நடுவிலே எலியா கர்த்தர் மேல் கொண்ட பக்திவைராக்கியமாய் நின்றார். அவருடைய பக்திவைராக்கியத்தினால் அனேகர் கர்த்தரை தெய்வமாய் ஏற்றுக் கொண்டார்கள். "ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம் என்றார்கள்." 1இரா 18:39. பவுல் அப்போஸ்தலர் "புத்தியில்லாத காலத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தாரே." கலாத்தியர் 3:1. "ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்."1கொரி 16:9. "நாங்களும் ஏன் எந்நேரமும்

நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?" "நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக்குறித்து, நான் பாராட்டுகிறமேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன்." – 1கொரி 15:30,31. "உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்." – கலாத்தியர் 4:13 "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்."கலாத்தியர் 6:14. "ஆகையால் உங்கள்நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன் அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே."எபபேசிர் 3:13. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். –பிலிப்பியர் 1:21. ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" –பிலிப்பியர் 1:23. "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்." –பிலிப்பியர் 3:7. "அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்." –பிலிப்பியர் 3:11. "சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும் உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்." – 1தெச 2:9. "சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்." – 1தெச 3:7. "அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தா தீவை விட்டுப்புறப்படாமல் இருக்க வேண்டியதாயிருந்தது."– அப்போ 27:21. எத்தனை போராட்டங்கள், நிந்தனைகள், எதிர்ப்புகள், பரியாசங்கள், மரணத்திற்க்கு ஏதுவான காரியங்கள் பவுலின் வாழ்க்கையில் வந்தது ஆனாலும் அவர் கிறிஸ்துவின் மேல் கொண்ட பக்தி வைராக்கியம் இவை எல்லாவற்றிலும் இருந்து பாதுகாத்தது. "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?"ரோமர் 8:36. பவுல் கடைசியாக சொல்லுகிறார்,

**"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." –2தீமோ 4:7.**

**கடைசியாக சகோதர, சகோதரிகளே இப்படி நாமும் கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாக வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் நம் மூலமாய் அனேகர் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவார்கள். பக்திவைராக்கியமாக இருப்பவர்களுக்கு கர்த்தர் கொடுக்கும் வாக்குத்தத்தம் "ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன்." "அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்." —எண்25:12,13.**

**கர்த்தர் கிருபையில்**
**சகோதரர். ஆண்டனி**

## வாலிபர் பகுதி

கர்த்தருக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே அன்பு வாலிபப் பிள்ளைகளே அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

வாலிப பருவம் என்பது மிகவும் முக்கியமான பருவம் காரணம் என்னவென்றால். அந்த வாலிப பருவத்தில் உள்ளவர்கள் மிகவும் துடிப்பாகவும் திறமையாகவும் எதையும் செய்யக்கூடிய தைரியத்தையும் உடல் ஆற்றலையும் மிகுந்த வேகத்தையும் உடைய பருவம்.

இப்படியுள்ள வாலிபர்கள் தவறானவர்களின் கரங்களில் இருக்கும் போது அவர்கள் இவர்களை தவறான காரியங்களுக்கு பயன்படுத்துகிறார்கள். அடிமைபடுத்துகிறார்கள். வாலிபர்களை பற்றிய தேவனுடைய சித்தம் என்னவென்றால். சங் 127:4 – வாலவயதின் குமாரன் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். வாலிபர்கள் தன்னுடைய கரங்களில் அடங்கி இருக்கவே தேவன் விரும்புகிறார்கள். அதுவே அவருடைய சித்தமாக உள்ளது.

## 1. கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை செய்த வாலிபர்கள்.

கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது எஸ்றா 3:8 – இருபது வயதுமுதல் அதற்கு மேற்ப்பட்ட லேவியரைக் கர்த்தருடையக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை நடத்தும்படி வைத்தார்கள். இருபது வயதுமுதலுள்ள வாலிபர்களை தேவனுடைய ஆலயத்தின் வேலையை செய்யும்படி பயன்படுத்தினார்கள். மிகவும் உயர்ந்த பரிசுத்தமான வேலையை வாலிபர்கள் கர்த்தருக்கென்று செய்தார்கள்.

## 2. சாபத்தீடானதை இச்சித்த வாலிபன்

யோசுவா 7:1– ஆகான் என்பவன் சாபத்தீடானதிலே சிலதை எடுத்துக் கொண்டான். ஆகையால் இஸ்ரவேல் புத்திரர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது.

(i) தேவ திட்டம் / சித்தம் தடைப்பட்டது

(ii) ஆயி பட்டணத்தை பிடிக்க முடியாமல் தோற்றுப் போனார்கள். யோசுவா 7:4 – ஆனாலும் அவர்கள் ஆயியின்மனுஷருக்கு முன்பாக முறிந்தோடினார்கள்.

(iii) 36 பேர் மறித்துப்போனார்கள். யோசுவா 7:5 – ஆயியின் மனுஷர்கள் அவர்களில் ஏறக்குறைய முந்நூறுபேரை வெட்டிப்போட்டார்கள்.

(iV) ஆகானும் மறித்துப்போனார்கள். யோசுவா 7:25– அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து அவைகளை அக்கினியில் சுட்டெறிந்து கற்களினால் மூடினார்கள்.

(V) சிலகாலம் தேவ பிரசன்னத்தை இழந்தார்கள். யோசுவா 7:12– நீங்கள் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து நிக்கிரகம் பண்ணாவிட்டால் இனி உங்களோடு இரேன்.

(Vi) அவன் இச்சித்ததும் அழிந்து போனது. யோசுவா 7:25.26.

நாம் சிந்திக்க வேண்டியது மிக அவசியமானது ஒரு வாலிபனின் சாட்சியில்லாத வாழ்க்கை எவ்வளவு பெரிய அழிவை அவனுக்கும் மற்றசர்களுக்கும் கொண்டு வந்தது.

## 3. கர்த்தரின் குரலாய் இருந்த வாலிபன்.

யோபுவை காரணமில்லாமல் குறை சொன்ன நண்பர்களை கண்ட அந்த வாலிபன் அவர்களுக்கு பிரதியுத்திரம் கொடுத்தான். யோபு 32:3–

 அவர்கள் அவனை ஆகாதவனென்று தீர்த்ததினிமித்தம் அவர்கள் மேலும் அவனுக்கு கோபம் மூண்டது. எலிகூ யோபுவுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் மறு உத்தரவு கொடுத்த பிறகு தேவனும் அவனைப்போலவே யோபுவுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் மறு உத்தரவு கொடுத்தார். யோபு 38 முதல் 41 வது அதிகாரம் வரை அதை வாசிக்கலாம்.

### 4. கர்த்தர் சித்தம் செய்த வாலிபர் / நமக்கு முன் மாதிரியான வாலிபர்.

பிசாசு சோதித்த போதும் தேவனை மறுதலிக்காத வாலிபன் லூக்கா 4:4_ அவர்(இயேசு கிறிஸ்து) பிரதியுத்தரமாக மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

### 5. பொருளாசைக்கு மயங்காத வாலிபர்

பிசாசு உயர்ந்த மலையின் மேல் இயேசுவை கொண்டு சென்று எல்லாவற்றையும் காண்பித்து என்னை பணிந்துக்கொள் எல்லாம் உமக்கு தருவேன் என்றான். அதற்கு இயேசு பிரதியுத்திரமாக லூக்கா 4:8 – சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

### 6. உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்க வந்த வாலிபர்.

யோவான சொல்கிறார் இதோ உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்க வந்த தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான் 1:29. இயேசு சொல்கிறார் பிதாவின் சித்தம் செய்வதே என் போஜனம் என்று. அந்த அளவிற்கு அவர் பிதாவாகிய தேவனுக்கு கீழ்படிந்திருந்தார். யோவான் 19:30_ இயேசு காடியை வாங்கினபின்பு முடிந்தது என்று சொல்லி தலைச்சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்தார். பிரியமான வாலிப பிள்ளைகளே நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டியது மிகவும் அவசியமானது.

கர்த்தர்தாமே நம்மை நல்ல பாதையில் நடத்தும்படி நம்மை அர்ப்பணிப்போம். ஆமென்.

**கிறிஸ்துவின் பணியில்**

ATC Youth Team

Be an Example : I Timothy 4:12

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி–12:2 ) "

சகோ. பிராங்ளின் கலை செல்வன்
சகோதரி. மெர்ஸ்லின் ஏசுரெத்தினம்
சகோதரி. போத்தியம்மாள் கண்ணன்
செல்வன். எரிக் மார்க் ஆன்டனி
செல்வி. ரோஸினி சர்மன்ராஜ்
செல்வி. வனிஷா வர்க்கீஸ்
செல்வி. ஈவ்லினா ஜோஸ் யோஷ்வா
சகோ. முத்து கிருஷ்ணன்
சகோ. வில்சன் செல்லையன்
சகோதரி. எமிமாள் சாமுவேல்
சகோ. ஆரோக்கிய தாஸ்
சகோ. ராஜா குமார்
செல்வன். சாமுவேல் ஸ்ரீநிவாசன்

செல்வி. புஷ்பா ராஜன்
சகோ. சதீஷ்குமார் எத்திராஜ்
சகோதரி. ஜெனிஷா
சகோ. வேளாங்கண்ணி
செல்வன். ஆரோன் விஜயன்
சகோ. கோபு
செல்வி. சிஃபன்சிஹா சாம் ஆனந்த்
சகோதரி. சௌமியா ஸ்டாலின்
சகோதரி. ஆஸ்லின் ரோனியா
சகோதரி. டெய்சி ஸ்ரீனா ஆன்டனி
சகோதரி. சங்கீதராஜ்
செல்வி. லாரா கெசன்ட்ரா சதிஷ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)



திருமதி /திரு. எபிநேசர் – ஸ்நேகா
திருமதி /திரு. ஸ்டீபன் ஜெயக்குமார் – எப்சிபா
திருமதி / திரு. இம்மானுவேல்–சாந்தி
திருமதி / திரு. ஆமோஸ்–பிரிசில்லா
திருமதி / திரு. சிவகுமார் – கிளாடிஸ் பாப்பி
திருமதி / திரு. ஆரோக்கியராஜ் – பவானி
திருமதி/திரு. வர்கீஸ்– ஜெஸ்லட்
திருமதி /திரு. ஜான் பாஸ்கோ – அமளோர்பவ மேரி

# 2026 – ஆகஸ்ட் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/08/2026 | Sis. ஜீனா சதீஷ் | Sis. எப்சிபா ஸ்டீபன் |
| 09/08/2026 | சகோ. சதீஷ்குமார் | சகோ. தாமஸ் |
| 16/08/2026 | Sis. அல்ஜியா தாமஸ் | Sis. நகோமி ஜான்சன் |
| 23/08/2026 | சகோ. சாம் சுந்தர் | சகோ. எபிநேசர் |
| 30/08/2026 | சகோ. ஜான்சன் | சகோ. டேனியேல் மனோஜ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/08/2026 | சகோ. தாமஸ் | சகோ. சாம் ஆனந்த் |
| 14/08/2026 | சகோ.பிரசாத் | சகோ. ஸ்டாலின் |
| 16/08/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/08/2026 | சகோ. தாஸ் கருணா | சகோ. ரவிஜான் பீட்டர் |

### ஆராதனை ஒழுங்குகள்

சங்கிலி தொடர் ஜெபம்

06/08/2026 மாலை 6:00 முதல் 07/08/2026 காலை 6:00 வரை

**13/08/2026**

முழு இரவு ஜெப ஆராதனை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல்

அதிகாலை 1:00 மணி வரை

**15/08/2026**

சகோதரிகள் ஐக்கிய கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல்

இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி – எபிரேயர்

**28/08/2026**

வாலிபர் ஐக்கிய கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல்

இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி – எஸ்றா, நெகேமியா, எஸ்தர்

**29/08/2026–Saturday**

Area Prayer Cell

Time-6:30-7:30

**சனிக்கிழமை**

சிறுவர் வேதாகம பள்ளி

( June முதல் August வரை விடுமுறை )

**திங்கட்கிழமை**

பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

**செவ்வாய்கிழமை**

குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**

பாடல் பயிற்சி கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 ஆகஸ்ட் மாதத்திற்கான வேத வினா!



**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1.மூடனை கொல்வது எது?

2.--------- உமக்கு உண்டோ ? என்று யோபு தேவனிடம் கேட்டார் .

3. தன் பிள்ளைகளுக்காக யோபு செய்தது என்ன ?

4.தூக்கத்திலும் கலங்க பண்ணுவது எது?

5.எந்த இரண்டு காரியங்களை தனக்கு செய்யவேண்டாம் என்று யோபு கேட்கிறார்? ஏதேனும் இரண்டை எழுதுக?

6.எது கடற்கரை மணலைப் பார்க்கிலும் பாரமாயிருக்கும் என்று யோபு கூறினார்?

7. யாரை ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவன் எம்மாத்திரம்?

8.எது இரையில்லாமல் இறந்து போகும்?

9. தான் மூச்சுவிட இடங்கொடாமல் தேவன் தன்னை எதினால் நிரப்புவதாக யோபு கூறினார்?

10.யாருடைய வீண் எண்ணம் அற்றுப்போம்?

11.ஒரே வசனத்தை யோபும் அவன் நண்பரும் சொல்லுகிறார்கள், அது எந்த வசனம்?

12.தேவன் ............ மனுஷன் ............?

13.வானபரியந்தம் உயர்ந்தது எது?

14.விடியற்காலத்தில் என்னை தேடுவீரானால் நான் இரேன் என்று கூறியவர் யார் ?

15.காரியத்துக்கு உதவாத வைத்தியர்கள் யார்?

விடைகளை வருகின்ற 20-08-2026 க்குள்
(WhatsApp - +91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
**" யோபு : 1–20 "**
அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2026- ஜீலை மாத வேத வினாவுக்கு விடை

1. சீயோன் குமாரத்தியிடம் 2:10
2. யூதா 2:12
3. அழுக்கு வஸ்திரம் 3:3
4. 7 அகல்கள் 4:2
5. 2 ஸ்திரிகள் 5:9
6. சமுத்திரத்தில் 9:4
7. வைரம் 7:12
8. லீபனோனுக்கு 11:1
9. கோல் 8:4
10. குதிரைகளின் மணிகளில் 14:20
11. விக்கிரகங்கள் 13:2
12. தாவீதைப் போல 12:8
13. அசீரியாவின் 10:11
14. கிளை எனும் நாமமுள்ள புருஷன் 6:12,13
15. இத்தோ 1:1

## 2026- ஜீலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. சுகந்தி
சகோதரி. பியூலா மெர்சி பால்
சகோதரி. ஜெஸ்லட் வர்க்கீஸ்
சகோதரி. நகோமி ஜான்சன்
சகோதரி. ஜோன்ஸ் ராணி
சகோதரி. பிரிஸ்கில்லா செங்குட்டுவன்
சகோதரி. ஷீபா ஜீவல்சிங்
சகோதரி. சினேகா எபிநேசர்
சகோதரி. சாந்தி

சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. ஜீனா சதீஷ் குமார்
சகோதரி. ஜாஸ்மீன் பென்சாம்
சகோ. எபிநேசர்
சகோ. புஷ்பராஜ்
சகோ. பால்ராஜ்
சகோ. டார்வின். S.

# தேவ சமூகம்

"அதற்கு அவர்: என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்" (யாத் 33:14).

வேதத்தில் இரண்டாவது புத்தகம் யாத்திராகமம், யாத்திரை அல்லது பிரயாணம் பற்றிய ஆகமம். இது ஆங்கிலத்தில் EXODUS அதற்கு வெளியேறுதல் என்று அர்த்தம்.

## எகிப்திலிருந்து வெளியேறுதல்

நம்முடைய வாழ்க்கையும் ஒரு பிரயாணம் தான் பாவ உலகத்திலிருந்து வெளியேறி பரம கானானை நோக்கி பிரயாணம் செய்கிறோம். அந்த வனாந்திரமான யாத்திரையிலே மோசேயினுடைய ஏக்கம் நிறைந்த ஒரு ஜெபம் 'உம்முடைய சமூகம் எங்களுக்கு முன் செல்லவேண்டும். நீர் எங்களோடு வரவேண்டும்'என்பதே அந்த பிரயாணத்தை கர்த்தரோடுங்கூட மேற்கொள்வது எத்தனை ஆசீர்வாதமானது. கர்த்தர் உடனே வாக்களித்தார் என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் என்று.

## தேவ சமூகத்தில் வல்லமை

யோர்தானுக்கு இக்கரையிலே எங்கள் சுதந்தரத்தின் காணியாட்சி எங்களுக்கு உரியதாகும்படி நாங்கள் கர்த்தருடைய சமூகத்தில் யுத்த சன்னத்தராய்க் கானான் தேசத்திற்குப் போவோம் என்றார்கள்(எண் 32:32) தேவ சமூகத்தை உணர்ந்த தேவ மனுஷர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள் பெலவீனத்திலே பெலன் கொண்டார்கள், மரித்தவர்களை உயிரோடு எழுப்பினார்கள் பலத்த அற்புதங்களைச் செய்தார்கள்.

## தேவ சமூகத்தில் ஆனந்தம்

தேவ சமூகத்தில் வல்லமை உண்டு, மட்டுமல்ல ஆனந்தமும் உண்டு. சங்கீதம் 16:11 ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்திவீர்,

உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. தேவ சமூகத்தில் இருக்கும் போது அவருடைய பிரசன்னமும், கிருபையும் மகிழ்ச்சியும் நமக்குள் பெருகி வழியச் செய்கின்றன. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கின்றது.(ரோமர் 14:17)

## தேவ சமூகத்தில் அற்புதங்கள்

(எண்17:7,8)'அந்தக் கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமூகத்தில் வைத்தான் மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது இதோ லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது. அது துளிர்விட்டு பூப்பூத்து வாதுமைப் பழங்களைக் கொடுத்தது' உலர்ந்த கோலை உயிர்ப்பித்தவர் உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பிக்கிறார் உலர்ந்த மனமடிவான உள்ளங்களை உயிர்ப்பிக்கிறார் உலர்ந்த நம்பிக்கையை உயிர்ப்பிக்கிறார்.

## தேவ சமூகத்தில் கனமும் மகிமையும்

மகிமையும் கனமும் அவர் சமூகத்தில் இருக்கிறது வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது.(1நாளா 16:27) தேவ சமூகத்தோடு இணைந்து கர்த்தருக்கு செலுத்த வேண்டிய கனமும் மகிமையும் ஆகும். ஆகவே உங்களைத் தாழ்த்தி கர்த்தரை உயர்த்தி மகிமைப்படுத்துங்கள்.

கிறிஸ்துவுக்குள்
Sis.டெய்சி எபிநேசர்.

# தேவ வைராக்கியம் நமக்கு ஏன் தேவை

நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். எண்ணகாமம் 25:11 என்று வாசிக்கிறோம்.

(1)இன்றைக்கு நம்முடைய வைராக்கியம் எப்படி பட்டதாய் இருக்கின்றது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(2)சிலர் அநீதிக்காக வைராக்கியம் கொள்கிறார்கள் ஆனால் நம்முடைய வைராக்கியமோ நீதிக்காக இருக்க வேண்டும்.

(3)எல்லாவற்றையும் விட நாம் தேவனுக்காக பக்தி வைராக்கியம் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

நீதிக்காக வைராக்கியம் கொள்வது என்றால்!! நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்; அதை நான் உங்களிடத்தில் இருக்கும் பொழுதுமாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்டவேண்டும்.– கலாத்தியர்(4:18) ல் வாசிக்கிறோம். நீதிக்கான வைராக்கியம் ஏனென்றால் "கர்த்தர் நீதியுள்ளவர், அவர் நீதியின்மேல் பிரியப்படுகிறவர், அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது." சங்–11:7.என்பதால் தான்.

நல்லவரே இயேசு நல்லவரே
இக்கட்டு நாளில் நல்லவரே
தம்மை நம்பும் யாவருக்கும்
நல்லவரே . . .

இயேசு நுகங்களை முறிப்பவரே
உன் கட்டுகளை அறுப்பவரே
அரணும் கோட்டையும் அவரே . . .

இயேசு நித்தமும் நடத்திடுவாரே
கரம் பிடித்தவர் கைவிடாரே
நன்மைகள் வாழ்வில் செய்வாரே . . .

ஆபிராகாமை பெருகச்செய்தாரே
நம்மையும் திரளாய் பெருகச்செய்தாரே
ஆயிரம் ஆயிரம் ஆத்துமாக்களை
தருவாரே . . .

துதியில் மகிழச் செய்வாரே
சபையை காக்கும் தேவன் அவரே
தொடர் நன்றி சொல்ல வைப்பவரே . .

வாக்குதத்தத்தில் உண்மையானவரே
வாக்கு மாறாத தேவன் அவரே
புதிய நன்மைகள் தருவாரே . . .

எந்நேரமும் சத்தியம் அருள்பவரே
துஷ்டன் இல்லை துஷ்டன் இல்லை
உன் வாழ்வில் துஷ்டன் இனி இல்லை
என்றவரே . . .

இயேசு நம்வாழ்வில்,
குடும்பங்களில், சபையில்,
தேசத்தில் என்றென்றும்
இருப்பாரே . . .

# Kids Corner

## AUGUST MONTH QUIZ FOR CHILDREN

1.Who Become the leader of Israel after Moses died ?
2.Who hid the Two spies in Jericho ?
3.What sign did Rahab hang in her Window ?
4.How many stones were taken from the Jordan as a memorial ?
5.Where were the twelve stones set up ?
6.What happened to the walls of Jericho ?
7.Who took the accursed thing from Jericho ?
8.What did Achan steal ?
9.On which two mountains were the blessing and cusses read ?
10.What miracle did God perform during the battle against the Amorites ?
11.How many Amorits Kings hid in a cave ?
12.How many Kings did Joshua defeat in Canaan ?

***Kids Find the answer from the Book of***

" JOSHUA : 1 – 12 Chapter's "

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !
தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.தாஸ் கருணா அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்க்ளின் அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும், ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும், கொடுத்து ஊழியத்தை தாங்கமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
நன்றி

# ANSWER'S FOR THE MONTH OF JULY

1. Silas – Acts 15 : 40
2. A man of Macedonia asking for help – Acts 16 : 9
3. Lydia – Acts 16 : 14
4. Praying and Singing Praises to God – Acts 16 : 25
5. Aquila and Priscila – Acts 18 : 3
6. Books of magic – Acts 19 : 19
7. Demetrius – Acts 19 : 24
8. Eutychus – Acts 20 : 9
9. Agabus – Acts 21 : 10-11
10. King Agarippa – Acts 26 : 28
11. Melita – Acts 28 : 1
12. A Viper – Acts 28 : 3

But Jesus called them unto him, and said, Suffer little children to come unto me, and forbid them not: for of such is the kingdom of God.

Luke 18:16

## CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF JULY

Felisha
Feshika
Fyona
Abel
Solomon
Ryan Satheesh
Mahendrika Sri
Rheul Ashkinaz

Riya Priti
Dion Bensam
Ebisha
Jayden
Hanshika
Sifenshika
Aran Rajaselvan
Hanish

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

**BRO.** ஆரோக்கியதாஸ் . P
99870126

### செயலாளர்

**BRO.** தாமஸ்
66810423

### பொருளாளர்

**BRO.** ஜான்சன்
97610275

### வாலிப ஐக்கிய தலைவர்

**BRO. M.** கிறிஸ்டோபர்
67096449

### பெண்கள் ஐக்கிய தலைவி

**SIS.** டெய்சி எபினேசர்
60686612

**என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து, அவருடைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்.** சங்கீதம் *35:9*

**Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com**
**Church Website Address - ahmaditamilchurch.com**

**Church Postal Address**
**Your Name**
**PO.Box.No.46795**
**Fahaheel-64018**
**Kuwait.**

www.ahmaditamilchurch.com
Follow: ATC Tamil | YouTube | Facebook | Instagram

PRIVATE CIRCULAR ONLY